ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2286/01 - 2022 ජුනි මස 27 වැනි සඳුදා - 2022.06.27
*2286/01 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மஹர/டீ/கா.சுவீ./2/கடவத்தை நகர அபி./பக்கப் பாதை.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2014/எச்டபிள்யூ/98.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், மஹர பிரதேச செயலாளர் பிரிவில், அதிகாரி பத்துவை பிரிவில் உள்ள கரகஹமுனை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட 2022.03.07 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கம். 4285 இல் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0053 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: அளுபோகஹவத்தை; விபரம்: (கடவத்தை இடைமாறலை நிர்மாணிப்பதற்காக காணி எடுக்கப்படுகின்றது); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டி. ஏ. எஸ். சில்வா; விஸ்தீரணம்: 0.0053 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்தல் அதிகாரி,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
2022, யூன் 15.

EOG 06 - 00189

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: கா/அபி/கா/CEP-413/2021.

காணி எடுத்தற் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2007/32 மற்றும் 2017.02.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 6ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கடத்திரல் வரைப்பட இல. 510820 இன் தொகுதி இல. 05 இன் தாள் இல. 5 இன் துண்டு இல. 439 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பகுதி மீள் அளவீடு செய்து துண்டு களுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

*01.* **துண்டு இல. 439**

காணியின் பெயர்: தம்பபில்லேவவத்தை அல்லது மீகஹ வத்தை, மில்லகஹஓவிட்ட மற்றும் மீகஹவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: எஸ். ஏ. டீ. எல். குமாரி, இல. 159/ஏ 2, சூரிகம, கடவத்தை, (நீக்குவதற்காக); காணியின் விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்
மஹர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹர.

EOG 06 - 0219/1

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: கா/அபி/கா/CEP-414/2021.

காணி எடுத்தற் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2007/32 மற்றும் 2017.02.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 12ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கடத்திரல் வரைப்பட இல. 510821 இன் தொகுதி இல. 01 இன் தாள் இல. 5 இன் துண்டு இல. 397 பகுதி 510821 இன் தொகுதி இல. 01 இன் தாள் இல. 13 இன் துண்டு இல. 446, 447 மற்றும் 448 ஆக பிரிக்கப்பட்டு துண்டுகளுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

*01.* **துண்டு இல. 446**

காணியின் பெயர்: கொடபரகஹவத்தை அல்லது ஹொரகஹ வத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: எம். கே. கே. பத்மலத்தா மற்றும் ஏனையோர், இல. 56/டீ, ராஜசிங்ஹ மாவத்தை, சூரியபாலுவ, கடவத்தை; காணியின் விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 447**

காணியின் பெயர்: கொடபரகஹவத்தை அல்லது ஹொரகஹ வத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: எம். கே. கே. பத்மலத்தா மற்றும் ஏனையோர், இல. 56/டீ, ராஜசிங்ஹ மாவத்தை, சூரியபாலுவ, கடவத்தை, (நீக்குவதற்காக); காணியின் விஸ்தீரணம்: 0.0060 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 448**

காணியின் பெயர்: கொடபரகஹவத்தை அல்லது ஹொரகஹ வத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; காணியின் உரிமை கோருவோர்: எம். கே. கே. பத்மலத்தா மற்றும் ஏனையோர், இல. 56/டீ, ராஜசிங்ஹ மாவத்தை, சூரியபாலுவ, கடவத்தை, (நீக்குவதற்காக); காணியின் விஸ்தீரணம்: 0.0009 ஹெக்டயார்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹர.

EOG 06 - 0219/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.